# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2023 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க,*
## உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

---

*(2023 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2023, மே மாதம் 12 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 45.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2023 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

[2023 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.- ஒ. 10/2023

### 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

**1.** (1) இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் இப்பிரிவினதும், 2,4,7,8,9,11,13,15,16,19 மற்றும் 22 ஆம் பிரிவுகளினதும் ஏற்பாடுகள், சட்டமூலமானது பாராளுமன்றச் சட்டமொன்றாகவரும் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) கீழேயுள்ள பட்டியலின் *நிரல் II* இல் குறித்துரைக் கப்பட்டவையும் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளைத் திருத்து கின்றவையும் அப்பட்டியலின் *நிரல் I* இல் குறித்துரைக்கப்பட்டவை யுமான இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அப்பட்டியலின் *நிரல் III* இல் குறித்துரைக்கப்பட்டவாறான அந்தந்தத் தேதிகளில், விடயத்துக் கேற்ப, நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நடைமுறைக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

"**பட்டியல்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| இச்சட்டத்தின் பிரிவு | முதன்மைச் சட்டவாக்கத்தின் திருத்தப்படுகின்ற பிரிவு | நடைமுறைக்கு வரும் தேதி |
| 3 | 37(1)(ஆ) | 01.04.2021 |
| 5 | 84அ(1ஆ) | 01.01.2023 |
| 6 | 85(4) | 01.01.2023 |
| 10 | 113(1) (ஆ), 113(1) (ஆஆ), 113(1அ), 113(1ஆ) மற்றும் 113(1இ) | 01.04.2023 |
| 12 | 135(3), 135(3அ) மற்றும் 135(4) | 01.04.2023 |

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| இச்சட்டத்தின் பிரிவு | முதன்மைச் சட்டவாக்கத்தின் திருத்தப்படுகின்ற பிரிவு | நடைமுறைக்கு வரும் தேதி |
| 14 | 150(1) (அ), 150(1) (ஆ), 150(1) (இ) மற்றும் 150(2அ) | 01.04.2023 |
| 17 | 195 | 01.04.2018 |
| 18 | முதலாம் அட்டவணையின் பந்தி 4 இன் உட்பந்தி (1), பந்தி 10 இன் (1) ஆம் உட்பந்தியின் விடயம் (ஈ) (iii) மற்றும் பந்தி 13 | 01.10.2022 |
| 20 | மூன்றாம் அட்டவணையின் பந்தி (எஎ) | 01.04. 2022 |
| 20 | மூன்றாம் அட்டவணையின் (சசச) என்னும் பந்தியின் (ii) ஆம் மற்றும் (iii) ஆம் உட்பந்திகள் | 01.10. 2022 |
| 20 | மூன்றாம் அட்டவணையின் பந்தி (நந) வும் பந்தி (ய) வின் (ii), (v) மற்றும் (vi) என்னும் உட்பந்திகளும் | 01.04.2023 |
| 20 | மூன்றாம் அட்டவணையின் பந்தி (ர) | 27.05.2021 |
| 21 | - | 01.10.2022. |

.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்

**2.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(2அ) (அ) ஆளொருவர், இந்தத் (திருத்தச்) சட்டம் தொடங்குகின்ற தேதியன்று அல்லது அதன்பின்னர், கூட்டுமொத்தத்தில் 500,000 ரூபா தொகையினதான அல்லது அதற்கு மேற்பட்ட பணத்தொகையொன்றை, ஒரு நாளில், அல்லது தனியொரு கொடுக்கல்வாங்கல் தொடர்பில் அல்லது ஒரு நிகழ்ச்சி தொடர்பான தொடர்ச்சியான தனியொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஒரு வங்கிக் கணக்கினூடாகப் பணம்பெறுநரின் கணக்குக்கான காசோலையொன்று அல்லது பணம்பெறுநரின் கணக்குக்கான வங்கிவரைவொன்று என்ற வகையாகவல்லாது வேறு வகையில் அல்லது ஒரு கடன் அட்டையின், பற்று அட்டையின் அல்லது இலத்திரனியற் கொடுப்பனவு முறைமையின் பாவனையின் மூலம் இன்னோராளுக்குச் செலுத்துமிடத்து -

(i) முதற்குறிப்பிடப்பட்ட ஆளின் வருமானத்தைக் கணக்கிடுவதில் அத்தகைய கொடுப்பனவுகள்

தொடர்பிலான ஏதேனும் கழிப்பனவு அனுமதிக் கப்படுதலாகாது; அத்துடன்

(ii) செலுத்தப்பட்ட தொகைகள், முதற்குறிப்பிடப்பட்ட ஆளினது சொத்தொன்றின் ஆகுசெலவாகக் கருதப் படுதலாகாது.

(ஆ) பந்தி (அ) வின் ஏற்பாடுகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதலாகாது:-

(i) இலங்கை அரசாங்கத்தினாலான அல்லது ஏதேனும் அரசாங்க நிறுவனத்தினாலான ஏதேனும் கொடுப்பனவுக்கு;

(ii) ஒரு வங்கியினாலான அல்லது நிதிநிறுவனத்தினா லான ஏதேனும் கொடுப்பனவுக்கு; அத்துடன்

(iii) அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய வகுப்பினரான ஆட்களுக்கு அல்லது கொடுப்பனவுகளுக்கு.

(இ) இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காக –

"வங்கிக் கணக்கு" என்பது, இலங்கையிலுள்ள ஒரு வங்கியில் அல்லது நிதிநிறுவனத்தில் பேணப் பட்ட ஏதேனும் கணக்கு என்று பொருளாகும்.

"அரசாங்க நிறுவனம்" என்பது, இலங்கை அரசாங் கத்தின் ஏதேனும் திணைக்களம் அல்லது பொறுப்புமுயற்சி என்று பொருளாகும் என்பது டன், ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தையும் உள்ளடக்கும்; அத்துடன்

"தனியொரு கொடுக்கல்வாங்கல்" என்பது, தனியொரு விலைப்பட்டியின்மீது, பெறுகையின்மீது அல் லது கூற்றின்மீது, எவையேனும் பண்டங்களின் அல்லது சேவைகளின் கொள்வனவு அல்லது பெறுகை என்று பொருளாகும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், ''செலவினம்''; என்னும் சொல்லுக்குப் பதிலாக, ''2021, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் சொத்தை மாற்றியமைப்பதில், சீராக்குவதில், பேணுவதில் அல்லது பழுதுபார்ப்பதில் மற்றும் 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் சொத்தைச் சீராக்குவதில் அவ்வாளினால் உறப்பட்ட செலவினம்;'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில், ''அளவுக்கு; அல்லது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அளவுக்கு''; என்னும் சொல்லை இடுவதன்மூலமும்;

(2) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில், ''அளவுக்கு'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, ''அளவுக்கு; அல்லது'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன

(3) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

''(iii) இலங்கையில் வதிவுள்ளதாக வியாபாரத்தை நடாத்துகின்ற ஒரு கம்பெனியிலிருந்து பெறப்பட்ட அளவுக்கு;''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 84அ என்னும் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 84அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது:-

''(1ஆ) உட்பிரிவு (1அ) வின் நோக்கத்துக்காக, இலங்கையின் நிரந்தரத் தாபனமொன்றினூடாகப் பெறப்பட்டவொரு கொடுப்பனவு அல்லாததும் வதிவற்ற ஆளொருவருக்குச் செய்யப்பட்டதுமானவொரு கொடுப்பனவின் விடயத்தில்,

''ஆளொருவர்'' என்பது, இலங்கை அரசாங்கத்தையும் உள்ளடக்கும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

''(4) இப்பிரிவின் நோக்கத்துக்காக, இலங்கையின் நிரந்தரத் தாபனமொன்றினூடாகப் பெறப்பட்டவொரு கொடுப்பனவு அல்லாததும் வதிவற்ற ஆளொருவருக்குச் செய்யப்பட்டதுமானவொரு கொடுப்பனவின் விடயத்தில், ''ஆளொருவர்'' என்பது, இலங்கை அரசாங்கத்தையும் உள்ளடக்கும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவு, அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிகளைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

''(7) ஆணையாளர் தலைமையதிபதி, இப்பகுதின்கீழ் வதிவற்ற ஆளொருவருக்குச் செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவிலிருந்து வரியைப் பிடித்துவைப்பதற்கான நடவடிக்கைமுறையைக் குறித்துரைக்கலாம். ஒவ்வொரு பிடித்துவைத்தல் முகவரும் நிதிநிறுவனமும் அத்தகைய நடவடிக்கைமுறைக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.''.

''(8) பிரிவு 84அ வின் ஏற்பாடுகளின்கீழ் முற்கூட்டிய வருமான வரியைக் கழிப்பனவு செய்துள்ள ஒவ்வொரு பிடித்துவைத்தல் முகவரும், யூன் முப்பதாம் தேதியன்று, செத்தெம்பர் முப்பதாம் தேதியன்று மற்றும் திசெம்பர் முப்பத்தோராம் தேதியன்று முடிவடைகின்ற ஒவ்வொரு காலாண்டின் பின்னரும் முப்பது நாட்களினுள், ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட வாறாகக்காலாண்டுக்கூற்றொன்றை ஆணையாளர் தலைமையதிபதியிடம் கோப்பிடுதல் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 100 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 100 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.-

"(ஆஆ) வரிக்கொள்கை மற்றும் அரசாங்க வருமானம் பற்றிய முடிபுகளைச் செய்யும் நோக்கத்துக்காக அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு"

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 111அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 111 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 111அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"அடிப்படை வரிக் கொள்கை பற்றித் திறைசேரிச் செயலாளரின் அபிப்பிராயம்*

111அ. இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு தொடர்பான அடிப்படை வரிக்கொள்கை பற்றி, இவ்வத்தியாயத்தின் இப்பகுதியின்கீழ் அல்லது பகுதி III றின்கீழ் அத்தகைய ஏற்பாடுகளுக்குப் பொருள்கோடும் நோக்கத்துக்காக அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்பட்ட ஏதேனும் வரிச் சட்டத்துக்காக, ஆணையாளர் தலைமையதிபதி, திறைசேரிச் செயலாளரின் அபிப்பிராயத்தை அல்லது அவதானிப்பைப் பெற்றுக் கொள்ளலாம்."

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "உட்பிரிவு (1அ) விற்கு அமைய இச்சட்டத்தின் கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "2023, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர், உட்பிரிவு (1அ) விற்கு அமைய இச்சட்டத்தின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(ஆஆ) இச்சட்டத்தின்கீழ் வேறேதேனும் ஆவணத்தைக் கோப்பிடுதல்;"

(2) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில், "இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2023, ஏப்றல் 1 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்ற வரிமதிப் பீட்டாண்டுக்கு முன்னர் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனி" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1ஆ) உட்பிரிவு (1இ) என்பதற்கமைய, 2023, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்ற வரிமதிப் பீட்டாண்டிலிருந்து பயனுறுவதாக, ஆளொருவர், அத்தகைய ஆளின் வரிவிபரத்திரட்டுக்களை ஒரு கணனி முறைமையை அல்லது செல்லிட இலத்திரனியல் உபகரணத்தைப் பயன்படுத்துவதனூடாக இலத்திரனியல் ரீதியில் கோப்பிடுதல் வேண்டும்.

(1இ) ஆணையாளர் தலைமையதிபதி, ஒரு வரிமதிப் பீட்டாண்டுக்கான வரி விபரத்திரட்டொன்றை ஆளொருவர் எழுத்தில் கோப்பிடுவதற்கு அதிகாரவளிப்பு வழங்குவது விடயத்தின் சூழ்நிலைகளில் நீதியானதும் ஒப்புரவானதுமென ஆணையாளர் தலைமையதிபதி கருதுமிடத்து அத்தகைய அதிகாரவளிப்பை வழங்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 123 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 123 ஆம் பிரிவு, அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(8) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் -

(அ) பதிவாளர் தலைமையதிபதித் திணைக்களத்தின் பதிவாளர் தலைமையதிபதி;

(ஆ) கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதி;

(இ) மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதி;

(ஈ) பண்டங்கள், வேலைகள் அல்லது ஆலோசனை மற்றும் ஆலோசனைசாராச் சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்தங்களை அளிப்பதற்குப் பொறுப்பாகவுள்ள வேறேதேனும் அரசாங்க நிறுவனத்தின் அலுவலரொருவர்;

(உ) ஒரு நிதிநிறுவனம்;

(ஊ) ஒரு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை; அல்லது

(எ) ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான வேறெவரேனுமாள்,

நிதிசார் கொடுக்கல்வாங்கல்பற்றிய தகவல்களுட்பட்ட அத்தகைய தகவல்களை இலத்திரனியற் படிவத்தில் கிரமமானவோர் அடிப்படையில் அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறாக அத்தகைய எவரேனுமாளின் அல்லது நிறுவனத்தின் கட்டுக்காப்பிலுள்ள அத்தகைய பதிவேடுகளுக்கான அணுகுகையை ஆணையாளர் தலைமையதிபதிக்கு வழங்குதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 135 ஆம் பிரிவைத் திருத்துதல்

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 135 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "உதவி ஆணையாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2023, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்காக உதவி ஆணையாளர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(3அ) உட்பிரிவு (4) இற்கமைய, உதவி ஆணையாளர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வரிசெலுத்துநரொருவருக்குத் திருத்தப்பட்ட வரிமதிப்பீடுபற்றிய அறிவித்தலொன்றைச் சேர்ப்பித்துள்ளவிடத்து, உதவி ஆணையாளர், திருத்தப்பட்ட வரிமதிப்பீடு எந்தத் தொடக்க வரிமதிப்பீடு தொடர்பானதோ அந்தத் தொடக்க வரிமதிப்பீட்டைப் பின்வரும் காலப்பகுதிகளினுள், எது பின்னர் நிகழ்கின்றதோ அப்போது மேலும் திருத்தலாம்:-

(அ) (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள்; அல்லது

(ஆ) உதவி ஆணையாளர் திருத்தப்பட்ட வரிமதிப்பீடு பற்றிய அறிவித்தலை வரிசெலுத்துநருக்குச் சேர்ப்பித்தபின்னர் ஓராண்டுக்காலப்பகுதியினுள்."; அத்துடன்

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "மூன்றாம் உட்பிரிவின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உட்பிரிவு (3அ) என்பதன்" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 139 ஆம் பிரிவைத் திருத்துதல்

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 139 ஆம் பிரிவு, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "எழுத்தில்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள்மூலம்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(இ) ஆணையாளர் தலைமையதிபதி, இந்தத் (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதன்பின்னர் செய்யப்பட்ட பரிசீலனைக்கானவொரு கோரிக்கையின் விடயத்தில், பரிசீலனைக்கான அத்தகைய கோரிக்கை ஆணையாளர் தலைமையதிபதியினால் பெறப்படும் தேதியிலிருந்து இரண்டாண்டுக் காலப்பகுதியொன்றினுள் (அ) என்னும் பந்தியின்கீழான அவரது முடிபையும் முடிபுக்கான காரணத்தையும் அறிவித்தல் வேண்டும். அத்தகைய முடிபு அத்தகைய காலப்பகுதியினுள் அறிவிக்கப்படாதவிடத்து, 140 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கிணங்க வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருந்தாலொழிய, பரிசீலனைக்கான கோரிக்கை அனுமதிக்கப்பட்டுள்ள தாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 150 ஆம் பிரிவைத் திருத்துதல்

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 150 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "வரியை, வட்டியை, பிந்திய கட்டணங்களை அல்லது தண்டங்களை செலுத்துவதற்கென வரிசெலுத்துநரின் மதிப்பிடப்பட்ட பொறுப்பு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வரிக்கான,

வட்டிக்கான, பிந்திய கட்டணங்களுக்கான அல்லது தண்டங்களுக்கான வரிசெலுத்துநரின் மதிப்பிடப்பட்ட பொறுப்புக்கு அல்லது செலுத்தப் படற்பாலதான வரித்தொகைக்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "பயன்படுத்தலாம்." என்னும் சொல்லுக்குப் பதிலாக, "பயன்படுத்துதல் வேண்டும்; அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(இ) வரிசெலுத்துநரின் கோரிக்கையின் பேரில், மீளளிப்பு உரிமைக்கோரிக்கையின்மீதான கணக்காய்வுக்குமுன்னர், வரிசெலுத்துநரினால் செலுத்தப் படற்பாலதான அடுத்துப்பின்னரான வருமானவரிக்கெதிராக மீளளிக்கத்தக்க தொகையின் அறுபது சதவீதத்தை எதிரீடுசெய்யலாம்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும்:-

''(2அ) (அ) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட வரிசெலுத்துநர் வதிவுள்ள ஒரு தனியாளாக விருப்பின் மற்றும் மீளளிப்பு உரிமைக்கோரிக்கை ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததாகவிருப்பின், ஆணையாளர் தலைமையதிபதி, ஒரு வரிக் கணக்காய்வுக்கு முன்னர், அத்தகைய வதிவுள்ள தனியாளினால் செய்யப்பட்ட மீளளிப்பு உரிமைக்கோரிக்கைத் தேதியிலிருந்து மூன்றுமாதங்களினுள் வருமதியான மீளளிப்புத்தொகையைச் செலுத்துதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய வதிவுள்ள தனியாள் தவணைப் பணம் செலுத்துநரொருவராகவிராதவரும் அவரது மீளளிப்பு உரிமைக்கோரிக்கை யூன் முப்பதாம் தேதியன்று, செத்தெம்பர் முப்பதாம் தேதியன்று, திசெம்பர் முப்பத்தோராம் தேதியன்று மற்றும் மாச்சு முப்பத்தோராம் தேதியன்று முடிவடைகின்ற ஏதேனும் காலாண்டுக்காக இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான சிரேட்ட பிரசையொருவராகவிருப்பின், அத்தகைய மீளளிப்பு உரிமைக்கோரிக்கை, ஒரு வரிக்கணக்காய்வுக்கு முன்னர், அத்தகைய தனியாளினால் செய்யப்பட்ட மீளளிப்பு உரிமைக்கோரிக்கைத் தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் செலுத்தப்படுதல் வேண்டும்."

(ஆ) பந்தி (அ) வின் கீழ் வருமதியான மீளளிப்புத் தொகையைச் செலுத்துதல் தொடர்பான முறையும் நடவடிக்கைமுறையும் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 154 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**15**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 154 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "தவணைதவறு கையிலுள்ள வரியின் வருமதியான அறவீட்டினைப் பின்பற்றி சேகரிக்கப்பட்டுள்ளவிடத்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நிறைவேற்றுகை பற்றிய அறவீட்டைப் பின்பற்றி அல்லது பற்றுகைப் பொருள் என்ற வகையாகச் சேகரிக்கப்பட்டுள்ளவிடத்து," என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 182 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**16**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 182 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(5) எண்பத்தாறாம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஒரு நிதிநிறுவனம் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத தொகையொன்றிலானவொரு தண்டத்துக்குப் பொறுப்பாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 195 ஆம் பிரிவைத் திருத்துதல்

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 195 ஆம் பிரிவு, அப்பிரிவின் "வரி" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்து வதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு" என்பது, 2011 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு என்று பொருள் படும்.".

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்

**18.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் 4 ஆம் பந்தியின் (1) ஆம் உட்பந்தியில், "உட்பந்திகள் (2), (2அ) மற்றும் (3) இற்கு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "உட்பந்திகள் (2), (2அ), (2ஆ) மற்றும் (3) இற்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) அவ்வட்டவணையின் 10 ஆம் பந்தியின் (1) ஆம் உட்பந்தியின் (ஈ) (iii) என்னும் விடயத்தில், "விஞ்சுகின்றவிடத்து அல்லது சமமாக உள்ளவிடத்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விஞ்சுகின்றவிடத்து" என்னும் சொல்லை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அவ்வட்டவணையின் 12 ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"**13. பங்கிலாபங்களுக்கான வரிவீதம்**

இவ்வட்டவணையின் ஏனைய பந்திகளில் உள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆளொருவரின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் 2022,

ஏப்றல் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் இரண்டாவது ஆறுமாதங் களுக்கான பங்கிலாபங்களிலிருந்தான ஈட்டுகை களையும் இலாபங்களையும் உள்ளடக்குமிடத்து, அத்தகைய ஈட்டுகைகளுக்கும் இலாபங்களுக்கும் 15 சதவீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண் டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்துக் கான இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்

**19**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணை, அவ்வட்டணையின் 1 ஆம் பந்தியில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(1அ) ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபை யுடனான உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள் ளவரும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின்போது அவரது ஏலவேயுள்ள பொறுப்புமுயற்சியின் விசாலிப்பில் முதலீடு செய்கின்றவருமான ஆளொருவருக்கு நான்காம் அட்டவணையில் கணிப்பீடுசெய்யப்பட்ட மூலதன அனு மதிப்புகளுடன் சேர்த்து மேலதிகமாக, இப்பந்திக்கிணங் கக் கணப்பீடு செய்யப்படும் அதிகரிக்கப்பட்ட மூலதன அனுமதிப்புகள் வழங்கப்படுதல் வேண்டும்.".

(2) அப்பந்தியின் (10 ஆம் உட்பந்தியில்-

(அ) அவ்வுட்பந்தியின் ''மூலதன அனுமதிப்புச் செலவினம்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் ''எனப் பொருள்படும்; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எனப் பொருள்படும்;" என்னும் சொற்களை இடு வதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பந்தியின் ''மூலதன அனுமதிப்புச் செலவினம்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

'' ''ஏலவேயுள்ள பொறுப்பு முயற்சி'' என்பது, தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்துக்களின் மீது முதலீடுசெய்யும் முதன் முதலாவது தேதிக்கு முன்னர் ஆளொருவரினால் நடாத்தப்பட்ட ஏதேனும் பொறுப்புமுயற்சி என்று பொருளாகும்;

''விசாலிப்பு'' என்பது, பின்வருவவற்றை உள்ளடக்கமாட்டாது:-

(அ) ஆளொருவரின் அல்லது இணையாளியின் ஏலவேயுள்ள பொறுப்பு முயற்சியின் தேய்மானத்துகுட்படத்தக்க சொத்தின் கைமாற்றம், கொள்வனவு அல்லது பரிமாற்றம் ; அல்லது

(ஆ) ஆளொருவரின் பொறுப்பு முயற்சி யொன்றின் ஏலவேயுள்ள தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்தை மாற்றீடு செய்வதற்குத் தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்தொன்றின் கொள்வனவு;

''புதிய பொறுப்பு முயற்சி'' என்பது, பின்வருவவற்றை உள்ளடக்கமாட்டாது:-

(அ) ஏலவேயுள்ள பொறுப்பு முயற்சி; அல்லது

(ஆ) ஆளொருவரின் அல்லது ஆளொருவரின் இணையாளியின் ஏலவேயுள்ள பொறுப்பு முயற்சியைப் பிரிப்பதன் மூலம் அல்லது மீள நிர்மாணிப்பதன் மூலம் அமைக்கப்பட்ட ஒரு பொறுப்பு முயற்சி;";

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணையைத் திருத்துதல்

**20**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டணையின் (எஎ) என்னும் பந்தியில் "இலங்கை அரசாங்கத்தினால் முழுமையாகச் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட ஓர் உருவகத்தினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதன் நேரடியாக அல்லது நேரடியானதல்லாத உறுப்பாண்மை அக்கறையின் ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட்டதும் அரசாங்கத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டதுமான ஓர் உருவகத்தினால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்";

(2) அவ்வட்டவணையின் (சசச) என்னும் பந்தியில் –

(அ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில், "பிரிவு **84**அ வின் (1அ) என்னும் உட்பிரிவின் கீழ் முற்கூட்டிய வருமானவரிக்கு அமைந்ததாகவிருக்கும் அந்த வதிவுள்ள கம்பெனியினால் பெறப்பட்ட வேறொரு வதிவுள்ள கம்பெனியினால் பெறப்பட்ட" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "வேறொரு வதிவுள்ள கம்பெனியினால் பெறப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(iii) *அத்தகைய பங்கிலாபம் 2023, சனவரி 1 ஆந் தேதிக்குமுன்னர் செலுத்தப் படுமிடத்து, வதிவற்ற ஆளொருவ ராகவுள்ள உறுப்பினரொருவருக்கு ஒரு வதிவுள்ள கம்பெனியினால் செலுத் தப்பட்ட பங்கிலாபமொன்று;"*

*(3)* *அவ்வட்டவணையின் (ந) என்னும் பந்தியை உடனடுத் துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-*

*"(நந) நாட்டுக்கான பொருளாதார நன்மைகளைக் கவனத்துட்கொண்டு இலங்கை அரசாங்கத்தின் கருத்திட்டமொன்று அமைச்சரினால் அங்கீகரிக் கப்படின் மற்றும் வெளிநாட்டு மானியக் கொடைகளிலிருந்து அதற்கு முழுமையாக நிதியளிக்கப்படின், அத்தகைய கருத்திட்டத்தில் ஈடுபடுவதிலிருந்து வதிவற்ற ஆளொருவரினால் பெறப்பட்ட தொகைகள்;"*

*(4)* *அவ்வட்டவணையின் (ய) என்னும் பந்தியில் -*

*(அ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில், "2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2023, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடு வதன்மூலமும்;*

*(ஆ) அப்பந்தியின் (v) ஆம் உட்பந்தியில், "2021, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2021, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2023, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;*

(இ) அப்பந்தியின் (vi) ஆம் உட்பந்தியில், "2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2023, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர், இரண்டு வரிமதிப்பீட்டாண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(5) அவ்வட்டவணையின் (ய) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(ர) 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தில் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டுக்காகவும் ஏற்பாடுசெய்யப்பட்ட அளவுக்கு, அச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அங்கீகரிக்கப்பட்டவாறாக மூலோபாயஞ்சார் முக்கியத்துவம்வாய்ந்த வியாபாரமொன்றைக் கொண்டுநடாத்துகின்ற அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெறப்பட்ட ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள் அத்துடன் அச்சட்டத்தின் 35ஆம் பிரிவின் நியதிகளின்படி தொழிலுக்கமர்த்தப்பட்ட ஊழியரொருவரின் தொழில் வருமானம்.".

தண்டம் அல்லது வட்டியிலிருந்தான நிவாரணம்

**21.** இரண்டாயிரத்து இருபத்திரெண்டாமாண்டு ஒற்றோபர் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்றதும் 2022 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்காக, சொல்லப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையின் 4 ஆம் பந்தியின்

(4) ஆம் உட்பந்தியின் (அ) என்னும் விடயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கம்பெனியொன்று வரியைச் செலுத்தியிராதவிடத்து, ஆனால் இச்சட்டம் தொடங்கும் தேதியை அடுத்துப்பின்வரும் மாதத்தின் முப்பதாம் நாளன்று அல்லது அதன்முன்னர் அத்தகைய கம்பெனியினால் செலுத்தப்படற்பாலதான வரியின் தொகையைச் செலுத்துமிடத்து, அத்தகைய கம்பெனி முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி ஏதேனும் தண்டத்துக்கு அல்லது வட்டிக்குப் பொறுப்பாதலாகாது.

**22.** (அ) 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் 1 ஆந் தேதிக்கு முன்னர் 1978 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடனான உடன்படிக்கையொன்றைத் தொழில்முயற்சியொன்று செய்துகொண்டதாகவிருந்தால்; அத்துடன்

ஐயத்தைத் தவிர்த்தல்

(ஆ) அத்தொழில்முயற்சியின் இலாபங்களும் வருமானமும் அல்லது அத்தொழில் முயற்சியினால் செலுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபம் முழுமையாக அல்லது பகுதியளவில் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுவதற்கு அல்லது வருமானவரியின் குறைவானவொரு வீதத்தில் வரிவிதிக்கப்படுவதற்கு அத்தகைய உடன்படிக்கை ஏற்பாடு செய்தால்,

அத்தகைய தொழில்முயற்சியின் அத்தகைய இலாபமும் வருமானமும் அல்லது அத்தகைய தொழில் முயற்சியினால் செலுத்தப்பட்ட அத்தகைய பகிலாபம், விடயத்துக்கேற்ப, செலுத்தப்படற்பாலதான வருமானவரியிலிருந்து தொடர்ந்து விலக்களிக்கப்பட்டதாதல் வேண்டும் அல்லது அத்தகைய உடன்படிக்கையில் ஏற்பாடுசெய்யப்பட்ட வீதத்தில் வருமானவரிக்கு உட்பட்டதாதல் வேண்டும்.".

*2022 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டத்தின் பட்டியல் "அ", பட்டியல் "ஆ" மற்றும் பட்டியல் "இ" என்பவற்றை மாற்றீடுசெய்தல்*

**23.** இரண்டாயிரத்து இருபத்திரெண்டாம் ஆண்டின் 45 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டத்தின் *பட்டியல் "அ", பட்டியல் "ஆ"* மற்றும் *பட்டியல் "இ"* என்பன இத்தால் நீக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பட்டியல்கள் இடப்படுகின்றன என்பதுடன் 2022 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டத்தின் 1 ஆம் பிரிவின் (2), (3), (4) மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளுக்கிணங்க அவை நடைமுறைக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதலும் வேண்டும்:-

***"பட்டியல் "அ"*** (பிரிவு 1)

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *இச்சட்டத்தின் பிரிவு* | *முதன்மைச் சட்டவாக்கத்தின் திருத்தப்படுகின்ற பிரிவு* |
| 2 | 5 |
| 4 | 12 |
| 5 | 14 |
| 6 | 16 |
| 11 | 66 |
| 18 | 87 |
| 21 | 94 |
| 22 | 120 |
| 24 | 133 |
| 25 | 134 |
| 26 | 135 |
| 27 | 136 |
| 32(1) மற்றும் (3) | 195 |
| 33(1), (2), (3), (4) மற்றும்(5) | முதலாம் அட்டவணையின் பந்தி 1 இன் உப்பந்திகள் (1அ) மற்றும் (1ஆ), பந்திகள் 3, 4, 5 மற்றும் 7 |
| 34 | இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் பந்தியின் உப்பந்தி (6அ) |
| 35(1) | மூன்றாம் அட்டவணையின் பந்தி (எள) |
| 37(1) | ஆறாம் அட்டவணையின் பந்தி 1 இன் (4) ஆம் உப்பந்தியின் (ஆ) என்னும் விடயம் |
| 38 | புதிய பிரிவு |

**பட்டியல் "ஆ"** (பிரிவு 1)

| நிரல் I | நிரல் II |
|---|---|
| இச்சட்டத்தின் பிரிவு | முதன்மைச் சட்டவாக்கத்தின் திருத்தப்படுகின்ற பிரிவு |
| 8(1) | 19 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு |
| 33(1) | முதலாம் அட்டவணையின் 1 ஆம் பந்தியின் (5) ஆம் உட்பந்தி |
| 35(2), (3), (4) மற்றும் (5) | மூன்றாம் அட்டவணையின் பந்திகள் (ஏஏ), (சச), (சசச) மற்றும் (ணண) |
| 36(2) | ஐந்தாம் அட்டவணையின் பந்தி 2 |
| 37(3) மற்றும் (4) | ஆறாம் அட்டவணையின் பந்திகள் 8 மற்றும் 10 |

**பட்டியல் "இ"** (பிரிவு 1)

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| இச்சட்டத்தின் பிரிவு | முதன்மைச் சட்டவாக்கத்தின் திருத்தப்படுகின்ற பிரிவு | நடைமுறைக்கு வரும் தேதி |
| 3 | 10 | 01.04.2021 |
| 7 | 18 | 01.04.2021 |
| 8 | 19(4) | 01.04.2018 |
| 9 | 46 | 01.04.2021 |
| 10 | 54 | 01.04.2018 |
| 12 | 69 | 01.04.2018 |
| 13 | 72 | 01.04.2018 |
| 14 | 73 | 01.04.2018 |
| 15 | 83அ | 01.01.2023 |
| 16 | 84அ | 01.01.2023 |
| 17 | 85 | 01.01.2023 |
| 19 | 88 | 01.01.2023 |

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *இச்சட்டத்தின் பிரிவு* | *முதன்மைச் சட்டவாக்கத்தின் திருத்தப்படுகின்ற பிரிவு* | *நடைமுறைக்கு வரும் தேதி* |
| *20* | *90* | *01.04.2021* |
| *32(2)* | *195* | *01.04.2020* |
| *33(1) மற்றும் (7)* | *முதலாம் அட்டவணையின் பந்தி 1 இன் உட்பந்தி (1இ) மற்றும் பந்தி 11* | *01.04.2023* |
| *35(6) மற்றும் (7)* | *மூன்றாம் அட்டவணையின் பந்திகள் (ப) மற்றும் (ய)* | *31.03.2023* |
| *36(1)* | *ஐந்தாம் அட்டவணையின் பந்தி 1 இன் உட்பந்தி (உ)* | *01.04.2021* |

.”.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**24**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.